செய்தி வெளியீடு எண் : 1473 நாள் : 26.08.2022

**நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தினை, மேம்படுத்தி அமைக்கப்பட்ட ஆட்சிக் குழுவின் (Governing Committee) முதல் கூட்டம், மாண்புமிகு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு அவர்கள் தலைமையில் நடைபெற்றது...**

மாண்புமிகு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு அவர்கள் தலைமையில், இன்று (26.8.2022) தலைமைச் செயலகத்தில் நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தினை மேம்படுத்தி அமைக்கப்பட்ட ஆட்சிக் குழுவின் (Governing Committee) முதல் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசியதாவது, "நாட்டின் விரைவான பொருளாதார வளர்ச்சிக்கும், விவசாயம், மருத்துவம், தொழில், வணிகம் மற்றும் சுற்றுலாத் துறைகளின் மேம்பாட்டிற்கும் அடிப்படையாகச் சாலை உட்கட்டமைப்பு திகழ்கிறது. தமிழகத்தில் சாலை உள்கட்டமைப்புப் பணிகளை மேற்கொள்ள, 1946 ஆம் ஆண்டிலேயே தனித்துவம் மிக்க, நெடுஞ்சாலைத் துறை உருவாக்கப்பட்டது. இப்பணிக்கு தொழில்நுட்ப வழிகாட்டியாக கடந்த 74 வருடங்களாக நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம் சிறப்புடன் செயலாற்றி வருகிறது.

நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம், 1948இல் மண் ஆய்வகமாக தொடங்கப்பட்டது. பின்னர், 1956 ஆம் ஆண்டு, அன்றைய மேதகு சென்னை ஆளுநர் திரு.ஸ்ரீ பிரகாசா அவர்களால், நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையக் கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டு, 1957 ஆம் ஆண்டு அன்றைய மாண்புமிகு முதலமைச்சர் திரு.கு.காமராஜ் அவர்களால், திறந்து வைக்கப்பட்டது.

நெடுஞ்சாலைத் துறையின் தேவைக்கேற்ப, தற்பொழுது சென்னையில், நிலக்கீல், மண், கற்கலவை மற்றும் போக்குவரத்து ஆகிய நான்கு ஆய்வகங்களுடனும், கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்ட அளவில் எட்டு மண்டல ஆய்வகங்களுடனும் செயல்பட்டு வருகிறது.

1967 ஆம் ஆண்டு, மார்ச் 11 ஆம் தேதி அன்றைய மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் திரு.மு.கருணாநிதி அவர்கள், நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்திற்கு வருகை புரிந்து, ஆய்வகங்களை ஆய்வு செய்து, நாட்டின் சாலைகளின் வளர்ச்சிக்கு, நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தின் செயல்பாடு மற்றும் பங்களிப்பைப் பாராட்டினார்.

நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தின் 50–வது பொன்விழா, 2006 ஆம் ஆண்டு, நவம்பர் 14 ஆம் தேதி கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வில் நடைபெற்ற புகைப்படக் கண்காட்சியை, அப்போதைய உள்ளாட்சித் துறை அமைச்சராக பொறுப்பு வகித்த, தற்போதைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.

பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சராக பொறுப்பேற்றவுடன், 04.06.2021 அன்று நெடுஞ்சாலை ஆராய்ச்சி

நிலையத்தை ஆய்வு செய்தபின். அன்றைய தினம் ஆய்வகங்களை பார்வையிட்டு, நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தை உலகத் தரத்திற்கு மேம்பாடு செய்யத் தேவையான உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் புதிய நவீன உபகரணங்களை கொள்முதல் செய்தல் ஆகியவற்றின் அவசியத்தினை வலியுறுத்தினேன். அதனை செயல்படுத்தும் விதமாக, சட்டமன்றப் பேரவையில், நெடுஞ்சாலைத் துறையின் 2021-22 ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையின் போது, நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தை உலகத் தரத்திற்கு உயர்த்துவதற்கான அறிவிப்பு வெளியிடப்பட்டது.

இந்த அறிவிப்பின் ஒரு பகுதியாக, நவீன உபகரணங்களை கொள்முதல் செய்யும் பணி நடைபெற்று வருகிறது. இனி வரும் காலங்களில் வழக்கமான நிதி ஒதுக்கீட்டினை பரிசீலனை செய்து, பரிந்துரைக்க ஒரு துணைக் குழு அமைக்கலாம் என்று ஆட்சிக் குழு கருத்து தெரிவித்துள்ளது. மேலும், நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தின் செயல்பாட்டுத் திறனை மேம்படுத்தும் பொருட்டு, ஆட்சிக் குழு (Governing Committee) மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தலைமையில் அமைக்கப்பட்டது.

ஆட்சிக் குழுவிற்கு (Governing Committee), நெடுஞ்சாலைத் துறையின் முதன்மை செயலர் திரு.பிரதீப் யாதவ் இ.ஆ.ப., அவர்கள், துணைத் தலைவராக உள்ளார். நிதி தொடர்பான அறிவுரைகளையும், வழிகாட்டுதல்களையும் வழங்க, அரசின் கூடுதல் செயலர், நிதித்துறை திரு.பிரசாந்த் மு. வடநேரே இ.ஆ.ப., அவர்கள், உறுப்பினராக உள்ளார். மேலும், முதன்மை இயக்குநர் (நெடுஞ்சாலைத் துறை), இயக்குநர் (நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம்) மற்றும் தலைமைப் பொறியாளர் (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) ஆகியோர் உறுப்பினர்களாகவும் உள்ளனர்.

இக்குழுவில், ஆராய்ச்சித் துறையில் முன்னோடியாகத் திகழும் இந்திய தொழில்நுட்பக் கழகம், (IIT) சென்னையின் முனைவர் திரு.அ.வீரராகவன் அவர்கள் மற்றும் மத்திய சாலை ஆராய்ச்சி மையம், புதுடெல்லி (CRRI)ன் தலைமை விஞ்ஞானி முனைவர் திரு.சே.வேல்முருகன் ஆகிய தொழில்நுட்ப வல்லுநர்களையும் உறுப்பினர்களாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது.

இக்குழுவின் மேலான வழிகாட்டுதல்கள் மற்றும் ஆலோசனைகள் மூலம் நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தை மேம்படுத்தி, உலகத்தரத்திற்கு உயர்த்த வேண்டும். மேலும், பெருமை வாய்ந்த நிறுவனங்களான மத்திய சாலை ஆராய்ச்சி கழகம் (CRRI), கட்டமைப்பு பொறியியல் ஆராய்ச்சி மையம் (SERC) மற்றும் இந்திய தொழிற்நுட்பக் கழகம் (IIT) ஆகியவற்றிற்கு நிகராக, துறைக்குத் தேவையான நவீன ஆராய்ச்சிகளை சிறப்பாக மேற்கொள்ள, தேவையான தொழில்நுட்ப பயிற்சிகளை நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தின் அலுவலர்கள் மற்றும் பொறியாளர்களுக்கு பயிற்சி நிலையத்தின் மூலமாக வழங்க அறிவுறுத்தினார்.

இனி வரும் காலங்களில் ஆட்சிக் குழுவின் சீரிய வழிகாட்டுதல்களுடன், நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம் உயரிய நிலையினை அடைந்து, தமிழ்நாட்டின் சாலைகளின் தரத்தினை உயர்த்தி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையின் கீழ், ஒரு முன்னோடி ஆராய்ச்சி நிலையமாகத் திகழும்."

இக்கூட்டத்தில், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அரசு முதன்மைச் செயலர் மற்றும் துணைத் தலைவர் திரு. பிரதீப் யாதவ் இ.ஆ.ப., நிதித் துறை அரசு சிறப்புச் செயலர், திருமதி. ரீட்டா ஹரீஷ் தக்கர் இ.ஆ.ப., நெடுஞ்சாலைத் துறை முதன்மை இயக்குநர் மற்றும் உறுப்பினர் திரு.குமார், சென்னை நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய இயக்குநர் மற்றும் உறுப்பினர் திரு.ரெ.கோதண்டராமன், கட்டுமானம் மற்றும் பராமரிப்பு தலைமைப் பொறியாளர் மற்றும் உறுப்பினர் திரு.இரா.சந்திரசேகர், சென்னை இந்திய தொழில்நுட்பக் கழக (IIT) பேராசிரியர் மற்றும் உறுப்பினர் முனைவர் திரு.அ.வீரராகவன், புதுடெல்லி மத்திய சாலை ஆராய்ச்சி கழக (CRRI) தலைமை விஞ்ஞானி மற்றும் உறுப்பினர் முனைவர் திரு.சே.வேல்முருகன் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in